Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 6

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | விசுவாவசு ஆனி 1965 ஜூன் | இதழ் 6

உள்ளுறை பக்கம்

திருப்பள்ளி எழுச்சி ... 163
திருமயிலாடி ... 174
திருக்கோவில் ... 176
தமிழ்ச் சிவஞான போதம் முதல் நூலா? ... 184
மதிப்புரை ... 191
பொன் மொழி ... 194

பத்திராசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை–4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

நம் சமாஜச் செயற்குழுக் கூட்டம் 27—6—65 ஞாயிறு காலை 9-30 மணிக்கு அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிருர்கள்.

ஆனி மாத விசேட தினங்கள்

9 (23—6—65) கலிக்காம நாயனர் விழா
18 (2—7—65) மாணிக்கவாசகர் விழா.
19 (3—7—65) அமர்நீதி நாயனர் விழா.

நம் சமாஜத்தின் சார்பில் காலைக் கூட்டு வழிபாடு தினந்தோறும் திருமயிலைக் கபாலீச்சுரத்தில் நிகழ்வது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். அதன் முதல் ஆண்டு விழா 9—5—65 அன்று நிகழ்ந்தது. காலை 8-மணிக்குக் கபாலீச்சுரருக்குத் திருமுழுக்காட்டும் வழிபாடுகளும் நிகழ்ந்தன. திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் கயப்பாக்கம் திரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்களும் வாழ்த்துரை கூறினர். வழிபாட்டில் தவருது கலந்து கொண்ட 5 சிறுவர்களுக்குத் தக்கபரிசுகள் வழங்கப் பெற்றன.

நம் சமாஜச் சார்பில் 16—5—65 அன்று ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியார், ஸ்ரீ சிவஞானசுவாமிகள் குருபூஜை விழாக்கள் மிகச் சிறப்பாகப் பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் நிகழ்ந்தன. டாக்டர் வ. ஆ. தேவசேனபதி M.A.,Ph.D. அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, திரு. நல். முருகேச முதலியார், திரு. கொ. நீ. சிங்காரவேல் முதலியார் முதலியோர் இருபெரியார்களைப் பற்றியும் சிறக்க விரிவுரையாற்றினர்கள். பொருளாளர் திரு. V. ஆறுமுக முதலியார் அவர்கள் நன்றி கூறினர்கள்.

18—5—65 அன்று மாலை 6-மணிக்கு திருஞானசம்பந்தர் குருபூஜை விழா திருவான்மியூர் ஆலயத்தில் நம் சமாஜச் சார்பில் நிகழ்ந்தது. திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் B.A.,B.L. தலைமை வகித்தார்கள். வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்கள் திருஞானசம்பந்தர் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்கள். நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | விசுவாவசு ஆனி 1965 ஜூன் | இதழ் 6

திருப்பள்ளி எழுச்சி

—(மு. அருணாசலம்)—

பள்ளி எழுச்சி என்பது துயில் எழுப்புதல், எடுப்புதல். இலக்கியங்களுள் வரும் துயில் உணர்த்துதல் என்பதும் மரபு. ''தென்னரங்கத்தம்மானைப் பள்ளியுணர்த்தும் பிரான்'' என்பது தொண்டரடிப் பொடியாழ்வாருக்குரிய தனியன். பள்ளி எழுச்சி பாடுதல் தொன்று தொட்டுள்ள வழக்கம் என்பதைத்தொல்காப்பியம் நமக்கு உணர்த்தும். பரிபாடல் ஒன்று இதைச் சுவைபடக் கூறுவது இங்கு அறிந்து மகிழத்தக்கது. மதுரையைச் சிறப்பிக்க வந்த கவிஞர், 'வஞ்சியும், உறந்தையும் கோழியின் குரல்கேட்டுப் பள்ளி எழும்; ஆனால் எம்மதுரையோ அந்தணர் வேதம் ஓதுதல் கேட்டுத் துயில் எழும்' என்று பாடுகிறார்.

நான் மறை அந்தணர் நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழிய வஞ்சியும் கோழியும் போல
கோழியின் எழாது எம் பேரூர் துயிலே

என்பது பாட்டு. (கோழி–உறையூர்; காலையில் கூவுகின்ற சேவற் கோழி. பேரூர்–மதுரை)

போர் மீது சென்ற அரசன், தன் வலி மிகுதியால் கவலையற்றுப் பாசறைக் கண் உறங்கும்போது, சூதர் வைகறை நேரத்தில் அரசனைத் துயிலெழுப்புவதற்காகப் பாடுவதும், அரண்மனை வாயிலில் வைகறை நேரத்தில் பாணர் அரசரைத் துயிலெழுப்புமாறு பாடுவதும் துயிலெடை நிலை என்ற பெயரால் வழங்கும் என்று சங்க நூல்களாலும் தொல்காப்பியத்தாலும் அறிகிறோம்.

மாணிக்கவாசகர் பாடிய திருப்பள்ளியெழுச்சியே முதன்முதலாக எழுந்த திருப்பள்ளியெழுச்சிப்பாசுரமாக லாம். இவர் திருப்பெருந்துறையில் இதை அருளிச் செய்தார் என்பது வரலாறு. இது 10 பாடல்கள் கொண்ட பிரபந்தம். "எம்பெருமான்–பள்ளி எழுந்தருளாயே" என்பதை மகுடமாகவுடையது. இப்பதிகம் தோன்றிய பின்னர்த் தமிழிலே சில பள்ளியெழுச்சிப் பிரபந்தங்கள் தோன்றியுள்ளன.

வைணவ மரபில் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடிய 10 பாடல்கள் கொண்ட திருப்பள்ளியெழுச்சியானது நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களுள் ஒரு பகுதி என்பதுடன், வைணவர்களுடைய நித்தியாநு சந்தானப் பாசுரங்களில் முதலிடம் பெற்று இருக்கிறது; பெரியாழ்வாருடைய திருப்பல்லாண்டுக்கு அடுத்த முதலிடம் இதற்குரியது. இப்பத்துப் பாடல்களிலும் இவர் அரங்கத்தெம்பெருமானைப் பள்ளியுணர்த்துகிறார். 'அனைவரும் வந்து ஈண்டினர்; வைகறை கூர்ந்தது'; இரவியும் தோன்றினன் எனக்கூறி, அடியனை அளியனென்றருளி உன்னடியார்க்கு ஆட்படுத்தாய், அவர்க்கு நாளோலக்கம் அருள. அரங்கத்தம்மா, பள்ளி எழுந்தருளாய்" என்று ஆழ்வார் வேண்டுகிறார். இங்கு பளளி யுணர்த்துவதன் குறிப்பு, நாளோலக்கம் அருளுவதொன்றே என்பது கருதத்தக்கது. பெரியவாச்சான் பிள்ளை எழுதிய வியாக்கியானத்தில் "அநாதிமாயா சுப்தரான இவரைப் பெருமான் உணர்த்தினார். அதில் இவர் தம்பக்கல் வியாமோகத்தாலே சுப்தரான

அவரை ஆழ்வார் திருப்பள்ளி உணர்த்துகிறார்.'' என்று கூறுகிறார்.

இனி ஆண்டாள் பாடிய திருப்பாவை 29–ஆம் பாடலாகிய "சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து–உன் பொற்றாமரையடியே போற்றும் பொருள் கேளாய்'' என்பது திருப்பள்ளியெழுச்சிப் பொருளதுஎன்பர் பெரியோர். இது இருள் நீக்கிப் பகல் வரும் முன்னுள்ள சுத்தியந்த ப்ராதக் காலம்|பஞ்சபஞ்ச உஷத்காலம், "அஞ்ஞான தசை குலைந்து, ப்ராப்தி தசை புகுவதற்கு முன்பு ஞான தசையைச் சொன்னபடி'' என்பர் பெரியோர். இன்னும் சில வைணவப் பெரியார் "கதிரவன் குணதிசை'' என்ற திருப்பள்ளியெழுச்சியே ஆண்டாள் பாடியது, கால கதியில் அவர் பாடினார் என்ற வரலாறு மறைந்து தொண்டரடிப் பொடி பாடினார் என்ற கதை புதிதாக ஏற்பட்டது என்றும் கூறுவர்.

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த வேதாந்தியாகிய தத்துவராயஸ்வாமிகள் ஐந்து திருப்பள்ளியெழுச்சிகள் பாடியிருக்கிறார். இவை அவருடைய பாடுதுறையில் 84-88 தலைப்புகளாய் உள்ளன. முதல் திருப்பள்ளியெழுச்சி, அருள் திருப்பள்ளியெழுச்சி, இது பத்துப் பாடல்களால் ஆண்டவனுடைய சத்தியாகிய திருவருளைத் துயில் எழுப்புவதாகவுள்ளது; திருவருளை ஆசிரியர் இங்கு இறைவன், துறவியின் துணைவி நாயகி முதலான சொற்களால் விளித்துப் பள்ளி எழுப்புகிறார். திருவாசகத்து உள்ளதுபோல் இப்பள்ளியெழுச்சியும் "போற்றி'' என்றே துவங்குகின்றது. "உம்பருக்கு உணர்வரியாய் எமக்கெளியாய்'' என்ற 10–ஆம் பாடல் திருவாசகத்தை எடுத்து அமைத்தது என்பது வெளிப்படை. தமது குருவின் குருவாகிய சிவப்பிரகாச சுவாமியை இவர் இங்கு பரம்பொருளாகவே கொண்டு அச்சிவப்பிரகாசரிடத்துப் பிரிவற நிகழும் திருவருளை எழுப்புகிறார். இரண்டாம் பாடலில் மட்டும் "பொழுது புலர்ந்தது''என்ற கருத்தைக் கூறுகின்றார். ஏனைய இடங்களில் திருவருளைத் துதிப்பதோடு அமைகிறார்.

இரண்டாவது சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி. இந்த உருவகமாகச் சில செய்திகளைச் சொல்

கிருர். திருவாசகத் தொடர்கள் இங்கு மிகவாகப் பயில்கின்றன. 11–ஆம் பாடலில் "நீ எனைப் பணிகொளுமாறு கேட்போம் என்ற இடத்துமாணிக்கவாசகருடைய திருப்பள்ளியெழுச்சியின் 7–ஆம் பாடலில் வரும், "எது எமைப்பணி கொளுமாறு அது கேட்போம்" என்ற தொடரை அப்படியே எடுத்து அமைத்து இருக்கிருர். மூன்ருவது, சொருபானந்த சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி. மற்ற இரண்டும் தத்துவப் பிரகாச நாயனுர், பரிபூரணப் பிரகாச நாயனுர் ஆகியோரைக் குறித்தவை. இவற்றுள் வேதாந்தத் தத்துவக் கருத்துக்கள் மிகுந்து காணப்படும்.

தத்துவராய சுவாமிகள், இங்குக் கூறிய ஐந்து திருப்பள்ளி எழுச்சிகளோடு, முறையே 20, 21 பாடல்கள் கொண்ட திருவெம்பாவை இரண்டு பாடியுள்ளார் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இனி கருதத் தக்கது 18-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் முருகப் பெருமான்மீது பாடிய 10 பாடல்கள் கொண்ட பாடல்களுள், "பொழுது புலர்ந்தது, இயற்கை இன்ன இன்னவாறு மலர்ந்து இருக்கிறது பொழில் வாய்ப்புட்கள் கூவின, வானவர் முதலோர் வந்தனர், மறையவர் போன்ருேர்குழுமி வடமொழி தென்மொழிப் பாவால் உன்னை ஏத்துகின்ருர். அணிபணிகள் கொணர்ந்தார். பேரு வரமருள் செய நீ எழுந்தருளாய்" என்று சிதம்பர சுவாமிகள் பாடியுள்ளார்.

இவர் எல்லாப் பாடல்களிலும் சைவ சாத்திரக் கருத்துக்களை உவமையாக வைத்துப் பாடியிருக்கிருர், பத்தாம் பாடலில், விநாயகன் ஐங்கரத்தாலும் தழுவ வந்திருக்கிருன், முக்கட்பரமன் உன் முகவணி கண்டு மகிழ வந்திருக்கிருன், உமையம்மை உனக்குப் பாலூட்ட நினைந்து வந்திருக்கிருள் என்று மிக்க நயம்படக் கூறியிருக்கிருர்.

குமரகுருபரசுவாமிகள் மாணுக்கர் என்று சொல்லுகின்ற வெள்ளியம்பலவாணத் தம்பிரான் தம்ஆதீனத்தின் முதல் ஞான குருவாகிய குருஞான சம்பந்தர் மீது ஒரு திருப்பள்ளியெழுச்சி பாடினுர். இது காப்புச் செய்யுளோடு பன்னிரு பாடல்களை உடையது. இது பிற பிரபந்தங்கள்

போல் எண் சீர்விருத்தமாயிராமல் அறுசீர் கொண்ட ஈரடித்தாழிசைகளாய் உள்ளது. இங்கு பள்ளியுணராய் என்பது மகுடமாய் உள்ளது. குருநாதர் பள்ளியுணரவேண்டுமென்று ஆசிரியர் எழுப்புகின்றாரேயன்றி சூரியோதயம் ஆயிற்றென்றோ அடியவர்கள் வந்து நிற்கிறார்கள் என்றோ இவர் கூறவில்லை. இவர் காலம் 17–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

இவரிடத்தில் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் இலக்கணம் பயின்றார் என்பது மரபு. இவர் தம் ஞானாசிரியராகிய சிவஞான பாலைய சுவாமிகள் மீது திருப்பள்ளியெழுச்சி, ஒன்று பாடியிருக்கிறார். இது நான்கே பாடல்கள் உடையது. அடியார்க்கும் பிறருக்கும் காட்சி தரவும் ஞானசாத்திரங்களில் வரும் ஐயங்களை விளக்கவும் பள்ளியெழுந்தருள வேண்டுமென்று இவர் தம் ஆசாரியரை வேண்டுகிறார்,

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நம்மாழ்வார் பள்ளியெழுச்சி ஆண்டாள் திருப்பள்ளியெழுச்சி முதலிய பல பிரபந்தங்கள் தோன்றின.

18–ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் பிரபந்தங்கள் எவை என்று வகைப் படுத்திய காலத்தில் திருப்பள்ளியெழுச்சியும் ஒரு தனிப் பிரபந்தம் என்ற கருத்து ஏற்பட்டது, சதுரகராதியில் 96 வகைப் பிரபந்தங்களில்இதுவும் ஒன்று என்று கணக்கிடப்பட்டிருக்கவும் காண்கிறோம்.

19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இராமலிங்க சுவாமிகள் அருட்பெருஞ்சோதி திருப்பள்ளியெழுச்சி (10 பாடல்கள்) பாடியிருக்கிறார்.

“உள்ளமென் கமலம் பூத்தது, சன்மார்க்க சங்கத்தார்
தோத்திரம் பண்ணி
நிற்கின்றார், போற்றியென்கின்றார், சூழ்ந்தனர்,
வாழி என்கின்றார்
பெரியவர் சூழ்ந்தார், ஆரமுது இனிக்கும் நேரம்
இநநேரம் என்று
ஆரியர் புகன்றார், பாடினர் ஆடினர், சபையையும்
அலங்கரிக்கின்றனர்

எமக்கருளுதல் வேண்டும்'' என்று 10 பாடல்களிலும் பாடிய இவர், ஒரே பாட்டில் மட்டும், ''செய்பணி எல்லாம் சொல்லுதல் வேண்டும் என்று கேட்கின்றார்; இதுமட்டும் தத்துவராயர் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளது போல, திரு வாசகத் திருப்பள்ளியெழுச்சியின் ஏழாம்பாடற் கருத்தை எடுத்தமைத்த அவ்வளவேயாகும்.

இந்த நூற்றாண்டில் தமிழ் மக்களுக்குத் தம் பாட்டால் சுதந்திர வெறியூட்டிய சுப்பிரமணிய பாரதியும், பாரதமாதா மீது ஐந்து பாட்டால் ஒரு திருப்பள்ளி யெழுச்சி பாடினார். ''பொழுது புலர்ந்தது; தொண்டர் சூழ்ந்தனர்; நின்திரு நாமம் ஓதினர்; நின்னொளி காண மலர் கொடு வந்தோம்; நாங்கள் எழுப்பவும் நீ துயில் வாயோ? எமை ஆண்டருள் செய்வாய்'' இதுவே பாரதி யார் பாடிய திருப்பள்ளியெழுச்சியின் பொருள்.

1959-இல் வ. சு. செங்கல்வராய பிள்ளை, தணிகேசன் திருப்பள்ளியெழுச்சி பாடினார்கள். பல புதிய அமைப்புக் கள் இதனுள் காணப்பெறும். ''உபதேசம் செய்ய எழுந் தருள்'' என்பதே இதன் கருத்தாகும்.

திருப்பள்ளியெழுச்சியென்பது முன்னமேகுறிப்பிட்ட படி, இறைவனைத் துயிலுணர்த்தும் பாட்டு. ஞானமே சொரூபனாக, தேஜோ மயனாக. உள்ளவனுக்கு உறக்கம் ஏது, விழிப்பு ஏது, துயில் உணர்த்துதல் ஏது? இக்கேள்வி பற்றியே, ஆண்டவனைத் துயிலுணர்த்து முகத்தால் நம்மை நாமே துயிலுணர்த்திக்கொள்வதை இப்பாடல்கள் தெரிவிக்கின்றன என்றும் ஆன்றோர் கூறுவர்.

நாள்தோறும் பகலானது உலகம் விரிந்திருக்கின்ற காலத்தையும் இரவானது உலகம் குவிந்திருக்கின்ற காலத் தையும் குறிக்கும். இரவினுள் கடையாமம் சிறப்பு. கடையாமத்துள் முற்பாதி பிரும்ம முகூர்த்தமென்றும், பிற்பாதி அசுர முகூர்த்தமென்றும் சொல்வது ஒரு மரபு, அன்றியும், விடிய ஐந்து நாழிகை உள்ள நேரம் இலக்கிய மரபில் வைகறை என்னப்பெறும். இந்த நேரத்திலேயே துயிலெழுப்புதல் நடைபெறும் எனவும் சொல்வர். பண்டை இலக்கியங்களில் வைகறைப் போதின் வருணனை

கள் பல. அவையனைத்தின் கருத்தையும் பின்வந்த பள்ளி யெழுச்சிப் பாடல்களுள் காணலாம். இறைவன் படைப் புத்தொடங்குகின்ற அவதரம் பிரம்ம முகூர்த்தம் என் றும் சொல்வர்.

சங்கார காலத்தில் ஒடுங்கிய உயிர்களுக்கு மீளவும் பக்குவம் வருதற் பொருட்டு இறைவன் ஐந்தொழில் செய் கிருன். இதனுல் உயிர்கள் முன்பல பிறவிகளிலுள்ள அனு பவங்களின் பயனுகத் திரோத மலத்தினின்றும் நீங்கும் பக்குவம் பெறுகின்றன. மீளவும் இறைவன் தூல ஐந் தொழில் செய்தற்கு உள்முகமாய் நின்று முதற்கண் படைப்புத் தொழிலைத் தொடங்கும் அவதரமே திருப் பள்ளியெழுச்சி என்பது சைவப் பெரியார் கருத்து.

''திரோதன சுத்தி அதாவது ஏகமாய திரோதாயி மறைப்பால் மலத்தை நீக்குதல்'' என்பது திருவாசகத் திருப்பள்ளியெழுச்சிக்கு அமைந்துள்ள திருவுள்ளக் கிடக்கை, அகத்தியர் திருவுள்ளக் கிடையும் இதுவே யென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இறைவனதுஐந்தொழில் களுள் நான்காவது திரோதானம் மறைப்புத் தொழில், இங்கு இறைவன் உயிர்கள் பக்குவம் அடையும் வரை, நல் வினை தீவினைகளால் பெறவேண்டியுள்ள அனுபவங்களைம் பெற்றுக் கழிக்கும் பொருட்டு உண்மையை மறைத்து நிற் கின்ருன். இம்மறைப்புத் தொழிலில் முறையாக மலத்தை நீக்கி உயிரைத் தூய்மையடையச் செய்வது திரோதன சுத்தி.

திருப்பள்ளியெழுச்சியே திரோதனசுத்தி என்பதற்கு திருநாவுக்கரசர் புராணத்தில் சேக்கிழார் திருவாக்கை ஆதாரம் காட்டுவதுமுண்டு.

நிறணிந்தார் அகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும்
மாறவரும் திருப்பள்ளி யெழுச்சியினில் (68)

திலகவதியார் மருள் நீக்கியாரை ஆலயத்தினுள் அழைத்துச் சென்ருர். இங்கு திருப்பள்ளி எழுச்சி என்பது காலத்துக்கே பெயராய்வந்துள்ளது. மீண்டும் ஏயர்கோன் கலிக்காம நாயனுர் புராணத்தில் சங்கிலியார்.

> சேயிழையார் திருப்பள்ளி யெழுச்சிக்கு மலர் தொடுக்கும்
> தூயபணிப் பொழுதாக. *அணைந்தார்*''

என்று சேக்கிழார் கூறுகிறார், இங்கும் பள்ளி யெழுச்சி, காலமே குறித்தது.

இதுகாறும் கூறியவற்றால் திருப்பள்ளியெழுச்சி யானது அகவிருளின் நீங்கி அருளோடும்கூடி நிற்க விரும்பிய ஆன்மா இறைவனை நோக்கித் ''திருப்பள்ளியினின்றும் எழுந்தருளி வருக'' என்று அழைப்பதே ஆன்றோர் கருத்து என்பதாகும்.

எனினும், இங்கு ஒரு தன்மையை நாம் கருதுதல் பொருந்தும். ஐந்தொழில் நடத்துபவன் ஆண்டவன். நடத்துவது அவன் செயல். பிறர் விருப்பத்தை எதிர்பார்த்தோ, வேண்டுகோளுக்கு இரங்கியோ அவன் இச்செயல்கள் செய்வதில்லை. திரோதானமும் அவன் செயல். திரோதான சுத்தியும் அவன் செயல். உயிர்களின் செயலெல்லாம் தங்களைத் தாங்கள் பக்குவப்படுத்தி வைத்துக் கொள்ளுதல். உழவன் செய்யக் கூடியதெல்லாம், வயலை உழுது தொடிப் புழுதி கஃசா உணக்கி வைத்திருத்தல். மழை பெய்தவுடன் அதில் விளைவித்துக் கொள்ள முடியும். ஆனால் 'இப்போது மழை பெய்'' என்று மேகத்தை வற்புறுத்தி மழை பெய்விக்க யாராலும் முடியாது.

> ஏரியாம் வண்ணம் இயற்றும் வனத்திடரை இது வல்லால்
> மாரியார் பெய்கிற்பார் மறித்து

என்ற இரண்டாந் திருவந்தாதிப் பாடலில் (2197) பூதத்தாழ்வார் இக்கருத்தை அழகாகத் தெரிவிக்கிறார்.

அதுபோல இறைவன் கருணை வரும்போது நாம் அதைப்பெறத்தயாராக இருக்கவேண்டும்; வரும்படி அதை நாம் நிர்ப்பந்திக்க வியலாது. யாரிடம் எப்போது, ஏன், கருணை வந்து பொருந்துமென்று யாரும் சொல்லவியலாது. இதுபற்றியே இறைவன் அருளுக்கு ''நிர்ஹேதுக கருணை'' என்றும் சொல்வதுண்டு; அருள் என்பது இதுவே. ஆகவே

இக்கருணையைப் பெற நாம் போய் இறைவனைக் காலையில் துயிலுணர்த்தி வேண்டுவதனால் இது நடக்குமா, இதுதான் பள்ளியெழுச்சியின் பொருளா என்பது முக்கியமான கேள்வி.

'ஆண்டவனை வேண்டுவது தவிர, வேறு நாம் செய்ய யாது உளது? வேண்ட முழுதும் தருவோய் நீ என்று மாணிக்கவாசகர் பாடுகின்றாரல்லவா? ஆகவே நாம் அவனிடம் குறையிரந்து கொண்டேதான் இருப்போம்; என்றும் கூறுவார்கள், உண்மையே. ஆனால் வேண்டத் தக்கது அறிபவனாகிய அவனிடத்தில் என்ன வேண்டுவது? எனக்கு இன்னது அருள வேண்டும் என்று கேட்பது வேண்டுகோள் ஆகுமா? இவ்வேண்டுகோள் நம் அடிமைத் திறத்துக்குச் சிறப்பளிக்குமா?—என்பது ஆராயத்தக்கது. இதை ஆராய்ந்து மாணிக்கவாசகர் மிகவும் நன்றாகக் காட்டுகிறார். திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களில் நின் திருவடி தொழுகோம். (1, 2) உன் தாளிணை காட்டாய் (3) என்றெல்லாம் கூறுகின்ற அவர், ஏழாம் பாட்டிலே ஆண்டவனிடத்தில் தாம் வேண்டுவது என்ன என்பதையும் தெரியக் கூறுகிறார்.

அவர் கூற்றை யறியுமுன், தமிழ் நாட்டில் பயிர்த் தொழில் செய்யும் பெருங்குடி மக்கள் வாழ்க்கையில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சியொன்றை இங்கு நினைவு படுத்திக் கொள்ளுதல் தகும். நிலக்கிழாருக்குப் பல இடங்களில் நிலமிருக்கும். ஒவ்வொரு பகுதியில் ஒவ்வொரு தனியான வேலை நடைபெறவேண்டியிருக்கும். ஒன்றில் சேடை பாய்ச்ச, ஒன்றில் எருவிட, ஒன்றில் கொத்த, ஒன்றில் உழ, மற்றொன்றில் அண்டை வெட்ட—இவ்வாறு பலதரப்பட்ட வேலைகள் ஒரேநேரத்தில் நடைபெற வேண்டியிருக்கும். ஏவலாளர் இவற்றை நிலக்கிழாருக்குத் தெரிவிக்கிறார்கள், இப்பலவகை வேலைகளிலும், இதை முதலில் செய்ய வேண்டும். இதை அதிகாலையில் செய்தல் தகும், இது மாலையில். இது நாளை செய்யத் தக்கது என்ற திட்டம் நிலமுடையவர் மனத்தில் இருக்கும். இதைக் கேட்டு அறிந்து அதன்படி செய்வதே உத்தமமான ஏவலாளரின்

கடமை. எனவே இத்தகைய ஏவலாளர் அதிகாலையில் நில முடையவரின் வீட்டுக்கு வந்து அவர் உறக்கத்தில் இருந் தாலும் அவரை எழுப்பி வேலை இன்னது என்று தெரிந்து கொண்டு போய் அவ்வேலையைச் செய்வர். உரியவர் அதி காலையில் எழாமல் உறங்கினாலும், ஏவலாளர் அவரை உறக்கத்தினின்றும் எழுப்பியே தம் பணியைக் கேட்டுச் செல்வர். சமீப கால நிலச் சீர்திருத்தச் சட்டங்கள் வரும் வரை இந்த நிலைமையே தமிழ்நாட்டில் நன்செய் நிலப் பகுதிகளில் இருந்து வந்தது.

மாணிக்கவாசகர் பாண்டிய மன்னனின் மதிப்புமிக்க முதன் மந்திரியாக இருந்தவர்; பணியாட்கள் காலையில் வந்து தலைவனை உறக்கத்தினின்றும் எழுப்பி வாழ்த்தி வணங்கிப் பணி என்ன என்று கேட்டறிந்து செல்லும் நிலைகளை அவர் பயிர்த்தொழில் துறை ஒன்று மட்டிலும் அன்றி. வேறுபல துறைகளிலும் நன்கு கண்டறிந்து இருந்தார். பாண்டியநாடு பல்லவ ஆதிக்கத்தினின்று மீண்டும் தலை தூக்க முயன்ற காலம் அதுவாகும். படைத் தலைவரும் பிற அரசியல் துறைத் தலைவர் பலரும் அவர் கடைவாயிலில் அதிகாலையில்வந்து நின்று அவரது உத்தரவு கேட்டனர். மந்திரியாக இருந்தபோதும் கூட அவர் உள் ளத்தால் புறப்பற்றை நீத்து ஆண்டவன் பற்றொன்றே கொண்டவர். ஆதலால் உலகத்தைத் துறந்து ஆண்டவன் பணிக்குத் தம்மை அவர் ஆளாக்கிக் கொண்டபோது இந்த நினைவுடனே அவர் ஆண்டவனிடம் சென்று என்ன பணியென்று கேட்கிறார். "என்னை இன்று எவ்வாறு பணி கொள்கின்றாய்? யான் இன்று எப்பணி செய்வேன்? கட் டளையிடுவாயாக!" என்று எழுப்பிக் கேட்கிறார். இதுவே ஏழாம் பாட்டின் பொருள்.

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டு கொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச

மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னு!
எதுவெமைப் பணிகொளும் ஆறு அது கேட்போம்,
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே!''

உண்மையாகப் பார்த்தால் அவனுடைய சித்தப்படி நாம் நடக்க வேண்டியவர்களே யன்றி நம் செயல் என்று யாது உளது! நுணுகி ஆராயும் போது, திருப்பள்ளியெழுச்சி முழுமைக்குமே இதுவே கருத்தென்பது நன்கு விளங்கும்.

பழைய திருப்பெருந்துறைப் புராணத்தில்திருவாசகச் சிறப்புரைத்த சருக்கம் என்ற பகுதியில் திருப்பள்ளியெழுச்சிக்குக் கூறிய திருவுள்ளக் கிடக்கையும் இதுவே.

ஏர்மருவும் பள்ளியெழுச்சி பணிவிடை கேட்டு
ஆர்வமுடன் ஆண்ட அரற்கு அன்புசெயும் இயல்பே.

“பள்ளி எழுச்சியானது ஆண்டவனிடத்தில் சென்று பணிவிடை என்ன என்று கேட்டு ஆர்வமுடன் செய்வதாகும்'' என்பது இதன் பொருள் சாத்திரரீதியாக அன்றி உலகியல் ரீதியாகச் சொல்லப்பட்ட இப்பொருளே திருப்பள்ளியெழுச்சிக்குரிய உண்மையான கருத்தாகும். இக்கருத்தை மனத்தில் வைத்து நாம் பார்த்தால், இதுவே திருப்பள்ளி எழுச்சியின் கருத்து மட்டுமின்றி மாணிக்கவாசகர் திருவாசகம் முழுமையிலும் சிறப்பித்துக் கூறும் கருத்தென்பதையும் நாம் காண்போம். திருவாசகத்தின் பொருள் இவனே என்று காட்டிய பெரியார், அவனே வேண்டும் போதும், இதை அருள் என்று குறைபிரக்காமல் ‘உன் பணியைக் கட்டளையிடு'' என்று வேண்டுவார் என்பதே பொருந்துவதாகும்.

தலப்பகுதி:

திருமயிலாடி

(மு. அருணாசலம்)

இடம்: முருகப்பெருமானுக்குரிய தலம். தஞ்சை ஜில்லா சீர்காழி தாலுக்காவில், கொள்ளிடம்-சீர்காழி பஸ் சாலையில் கொள்ளிடம் தாண்டி மூன்று மைல் மேற்கில் சாலைக்குத் தெற்கே முக்கால்மைல் தொலைவில் ரயில் பாதையைக் கடந்து சென்று கோயிலை அடையலாம். சிறுசாலையில் கோயில் வளைவு காணப்படும்.

பெயர்: திருமயிலாடி, மயில் ஆடிய காரணத்தால்; இதை வடமொழியில் கேகி நிருத்தபுரம் என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுவாமி சுந்தரேசுவரர்; அம்பிகை பிருகந்நாயகி; தலவிருட்சம் வன்னி.

கோயில்: கிழக்குப்பார்த்த சந்நிதி, எதிரில் சிவ கங்கை என்ற திருக்குளம், சிறுகோபுரம். முருகன் வடக்கு நோக்கியவாறு சந்நிதியின் தென்புரம் தனிக் கோயிலில் இருக்கிறான். சுவாமிசந்நிதி மகாமண்டபத்திலேயே. உற்சவ முருகன் தேவிமாரோடு வீற்றிருக்கிறான். பிராகாரத்தில் முருகன் கோயில் இல்லை. திருமாளிகைச் சுற்று விசாலமாக இருந்தது இடிந்து போயிருக்கிறது. இங்கு சிவபூஜை செய்தோர் பலர் இருந்தனர் என்றும் அவர்கள் இவ்விடத்தில் சிவபூஜை செய்து வந்தனர் என்றும் ஆலயத்தார் சொல்கிறார்கள். நடராஜசபை தனியே வெளிப்பிரகாரத்தின் சனி மூலையில் உள்ளது. ஆலயத்துக்கு வெளியே கண்ணுவாசிரமம் என்ற இடத்தில் தனியான சுந்தர விநாயகர் கோயில் உள்ளது.

மூர்த்தி: மகாலிங்கம் பெரியவடிவம். எதிரில் உள்ள நந்தியும் பெரிய அழகான தோற்றம். பெரிய கொம்புகள். அம்பிகை கோயில் இரண்டு. பழைய அம்பிகை வடிவம்

பின்னமானபடியால், முற்காலத்தில் புதிய உருவம் ஒன்று செய்து வைத்தனர். ஆனல் அம்பிகை அருச்சகர் கனவில் எழுந்தருளி, பழைய உருவத்தை நீக்க வேண்டாம் என்று சொன்னதாகவும், அதுமுதல் இருவடிவங்களுக்கும் வழி பாடு செய்து வருவதாகவும் ஊரார் சொல்லுவர். அம்பிகை உருவம், பெயருக்கு ஏற்றாற்போல், சற்றே பெரியது. கோட்டங்களில் தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரமன் (சுதை உருவம்) துர்க்கை, சண்டேசர், வாயில் முகப்பில் குமார விநாயகர், நிருதி மூலையில் மகாகணபதி, நாகரும் பெரிய உருவங்களில் சத்தகன்னியரும் உள்ளனர். லிங்கோற்பவர் கோட்டம் கோயில் மாதிரி அமைக்கப் பெற்றுள்ளது. நவக்கிரகங்கள், பைரவர், சூரியன். சந்நிதியில் உள்ளவர் பாலசுப்பிரமணியர் மூலவர், தேவிமார் இல்லை: மயிலும் இல்லை. சதுர்ப்புஜம். பூமியை நோக்கிய கரமும் அமைத்த கரமும் போக, மற்ற இரண்டும் மலர் எடுத்துப் பெருமானை வடக்கு நோக்கி இருந்து அருச்சிக்கும் முறையில் உள்ளன, சுவாமி சந்நிதியில் பெரிய துவார பாலகர்.

உற்சவ மூர்த்திகள் உள்ளனர். முருகன் தேவியரோடு எப்போதும் மகாமண்டபத்தில் சந்நிதியிலேயே கிழக்கு நோக்கி இருக்கிறான். கையில் வில்லேந்திய கோலம். பதுமாசுரனோடு போரிட்டதான ஐதீகம். மயில்வாகனம் இல்லை. அதற்குப் பதிலாக வலப் பாதத்தில் பாதக் குறடும் இடப் பாதம் சிறு மயிலின் முதுகில் பாதத்தை வைத்த கோலத்திலும் உள்ளன. சோமாஸ்காந்தர் அழகிய நடுத்தர உருவம். சிவகாம சுந்தரியம்பிகை அழகான பொலிவு.

வரலாறு: அம்பிகை இங்கு மயிலாகப் பூசித்தார். மயில் ஆடியமையால் திருமயிலாடி, முருகர் மயில் அம்மயிலோடு அழகில் போட்டியிட்டமையால் முருகன் மயிலை விலக்கிவிட்டார். காலில் மிதிப்பதும் அதுவே. இது முருகர் அனுக்கிரக ஸ்தலம். குமாரக்கடவுள் பதுமாசுரனோடு போரிட்டபோது,அவன் ஜ்வர தேவதையை அனுப்ப குமாரர் இங்கு சுந்தரேசுவரரைப் பூசித்து, சீதளாதேவி

வரப்பெற்று இவளால் ஜ்வரதேவதையை அழித்துப் போரில் வெற்றி பெற்றார். வால்மீகி பூசித்தார்; ஜ்வர தேவதையை அழித்து வெற்றி பெற்றார். புதன் முதலான பலர் இங்கு முருகன் அருள் பெற்றனர், அயன் வேண்டுகோள்படி இது கயாக்ஷேத்திரமாயிற்று. லக்ஷ்மி வில்வத்தின் அடியில் பூசித்தமையால் இது வில்வாரண்யமுமாகும்.

விழா: கார்த்திகை விழா.

பாடல்: இல்லை. வடமொழியில் புராணம் உள்ளது.

நிர்வாகம்: தனியான குழுவும் நிர்வாக அதிகாரியும் உள்ளனர். கிராமம் முழுமையுமே கோயிலுக்கு உடைமை.

சிறப்பு: இது சிறப்பான முருகன் தலம் என்பது குறிப்பிடத்தக்கது.

—★—

திருக்கோவில்

(சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞானசம்பந்தன்)

திருக்கோவில் என்பது திரு+கோ+இல் எனப் பிரியும். இதில் திருவென்ற சொல் செல்வம், அழகு என்ற பொருட்பட அமைந்துள்ளது. திரு என்ற சொல்லிற்குப் பேராசிரியர்: 'கண்டோரால் வியக்கப்படுந் தன்மைத் தாதலின், அச்சொல் உயர் பொருள்களுடன் சேர்ந்து வருகின்றதென்று கூறுவார். கோவில் என்பது கோ+இல் எனப் பிரியும் காலத்து, அரசன்+இல்லம் எனவும் அரச மாளிகையெனவும் பெயரேற்கும். என்றாலும், இச்சொல் பொதுச் சொல், எனவே கொள்ளப்பெற்று, அரசனது கோவில், என்றும், கோவுடைய வில்லென்றும், ஆறும் வேற்றுமைத் தொகையாக விரிக்கப் பெறுகின்றது. அதுபற்றியே கோவில் என்பது பொது வகையான் வழங்கப்பெற்று, மன்னனது கோவில், சிவனது கோவில், திருமாலது

கோவில் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்கட்கு என்று பகுத்தறிவு தோன்றிற்றோ, அன்று தொட்டு இன்று வரை கோவில் நினைவு பிறந்து வளர்வதாயிற்று. "கோயிலில்லா வூரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம்மிடையே வழங்கி வரும் பழமொழிகளிலொன்று. கோவில்கள் சிறிய தோற் றங்களில் கட்டப் பெற்றுப் பற்பல ஆண்டுகளாகியும், சீராக 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான், ஒழுங்குற வெழுப்பப் பெற்றன வெனலாம். கோவில் தோன்றியதால்தான், மக்கட்குப் பத்தியுணர்ச்சி யியற்கையின் முகிழ்க்கலாயிற்று. தமிழகத்தில் எங்குக் கண் டாலும், கோயில்களை யெழுப்பியவர்கள் பல்லவர்களும், சோழர்களும், பாண்டியர்களுமே! இவர்களாற்றான், கோவி லாட்சி முறையைப் பின்பற்றியே அரசவாட்சியும் அமைய லானது. மன்பதை வாழ்மக்கட்கு, உரியவொரு பெருந்தலை வனே அரசன் (அல்லது) கோ. அக்கோவின் வடிவே இறை வனின் வடிவம் எனக்கொண்டு, நாடு மன்னனைச் சிறப்பு செய்து வருகிறது.

திருக்கோவில் என்பது செங்கல்லினாலோ வன்றி கற் களினாலோ கட்டப் பெற்றவையென வறிந்தோம். ஆனால், திருவாதவூரரின் அருள் நோக்குப்படி, அண்டமேவொரு திருக்கோவிலாக விளங்குகின்றதென்றும், அதனாலவ்வுண் மையினை வுணர்கின்றோம். பிரமனால், காலத்தைக் வரை யறை செய்து படைக்கப் பெற்ற விவ்வண்டம் அனைத்துக்கு மாய்ச் சேர்ந்து முளைத்தெழுந்ததோர் படர்ந்த வொளிப் பரப்பே இறைவனும் சிவனின்றன்மை. இவ்வொளி அன்றிய வொரு நெருப்புப பிழம்பே வடவாக்கினியாகும். இவ் வட வாக்கினித் தீயே, கடல்நீரைக் கொந்தளிக்காதிருக்கச் செய் கின்றது. அதுவும நின்னருள் வெள்ளத்தின் துணையே யாகும். அங்ஙனே சீருற்ற வடியவர்களின் உள்ளங்களிற் றேங்கியெல்லை கடவாதவாறு போற்றும் ஒளிவடிவினனே! திருப்பெருந் துறையிலுறைகின்ற ஒளி மயச் சிவனே! எனக்கு உறவார்? அயலார்தான் யார்? ஆனந்தத்தை யுரு வாக்குகின்ற சோதி! இதனால் அண்டமே ஒரு பெருந்திருக்

கோவில், அக் கோவிலுள் விளங்குபவனே சோதியனுன சிவன் என்பதை ஈண்டுணர்கின்ருேம்.

"பார்ப்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர்ப் படரொளிப்பரப்பே!
நிருறு தியே! நினைவதேல் அரிய
நின்மலா! நின்னருள் வெள்ளச்,
சிருறு சிந்தை யெழுந்ததோர் தேனே!
திருப்பெருந் துறையுறை சிவனே!
யாருற வெனக்கிங் காரயல் உள்ளார்,
ஆனந்த மாக்கு மென் சோதி!"

திருவா—கோயி—பதி—பா—9

திருப்பெருந் துறையில், சிவபெருமான், ஞானுசிரியனுகத் தோன்றி குருவுபதேசம் அருளினுர் மாணிக்கவாசகருக்கெனினும், திருக்கழுக்குன்றத்தில்தான் எல்லாக் கோலங்களையுப் காட்டியருளினுன் பெருமான் என்பதைத் திருவாசகப்பாவொன்றின் மூலம் விளக்கியருள்கின்ருர்.

மாறுபாடில்லாத, திருப்பெருந்துறையில் கோயில் கொண்டிலங்கும், எம்மானின் நாமங்கள் பேசுவார்க்கு, ஒப்பற்றதோர் இன்பத்தை நல்கி, துன்பத்தைத் துடைக்கும். எம்பெருமான்! ஈரமுள்ளதோர் வித்து மேற்கொண்டு விளையாமல், என் வினை விருப்பு, வெறுப்பற்ற சமபுத்தி யுண்டான பின் கணக்கற்ற திருக்கோல நீ வந்து காட்டினுய் திருக்கழுக்குன்றத்தின் பாலுள்ள நின் கோவிலிலே! என்ற கருத்துப்பட, சற்குருவின் தரிசனத்தை மாணிக்கவாசகர் கண்டார்; பாடினுர்.

"பிணக்கிலாத பெருந்து றைப்பெரு
மானுன் ருமங்கள் பேசுவார்க்
கிணக்கில்லாத தோரின்பமே வருந்
துன்பமே துடைத் தெம்பிரான்,
உணக்கிலாததோர் வித்து மேல்விளை
யாமலென் வினை யொத்த பின்,
கணக்கிலாத் திருக் கோலநீ வந்து
காட்டினுய்க் கழுக் குன்றிலே

திருவா—திருக்கழு—1

மாணிக்கவாசக அடிகளார் திருக்கழுக்குன்றினில், சற்குரு தரிசனம் கண்டார். பின்னர் தில்லையில்தான் நிருத்த தரிசனம் கண்டார். ஈண்டுத் தில்லையென்பது, எம்மான் நடனமிடுந் தில்லைக் கோயிலாகும். இறைவன் திருக்கோல மிதுதானென்று தெரியாதிருந்த வக்காலத்தே, அஃதாவது யான் கருப்பையிற் றங்கியிருந்த போழ்து, வுள்ளே புகுந்து உள்ளத்தே சார்ந்து, என்னுடைய கருவைத் திருத்தி, ஊனுட் புகுந்து, கருணையினால் என்னை யாண்டு கொண்ட, திருத்திருத்தி யென்னும் தலத்தை மேவியவனை, தித்திக்கும் சிவபதத்தை, அன்பின் பிணிப்பினால், நாயகியாகிய வடியேன், அழகிய தில்லைப் பெருங் கோயிலிலே கண்டு கொண்டேன்.

"உருத்தெரியாக் காலத்தே
உள்புகுந் தென் னுள் மன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக்
கருணையினு லாண்டு கொண்ட,
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்குஞ் சிவபதத்தை,
அருதியினால் நாயடி யேன்,
அணிகொ டில்லை கண்டேனே!"

திருவா—கண்டபத்து—1

வல்வழக் குரைத்த வன்றொண்டர்க்கு, எம்பெருமான், தன்னுடைய இருப்பிட மெதுவெனக் காட்ட வந்த காலை, திருவருட் குறையையே சுட்டினான். அத்திருக் கோவிலில் தான் அம்மையப்பரோடு சுந்தரருக்குத் திருக்காட்சியை நல்கினான். பித்தனே! பிறை நிலவைச் சூடியவனே! பெருமானே! அருளாளனே! எவ்வாற்றானும் உன்னை மறவாமல் நினைத்து வருகின்றேன். என்னுடையவுள்ளத்தில் பெண்ணையாற்றிற்குத் தென்பாலுள்ள திருவெண்ணெய் நல்லூர் திருக்கோவிலான வருட்டுறையில் உன்னை வைத்தாய்! அத்தனே! நான் உனக்கடிமை யானேன். இனி அல்லேன் என்று சொல்லவும் கூடுமோ?

"பித்தா பிறைசூடி பெரு மானேயருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை

வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
அத்தா வுனக் காளாயினி யல்லே னெனலாமே!
சுந்—தேவா—திருவெண்—1

மூவர் முதலிகளான தேவாரவாசிரியர்களுக்கும், மூன்று தனித்தனி கோவில்களிற்றான், திருக்கயிலாயக் காட்சியைத் தந்தருளினன் பெருமான். திருநாவுக்கரசர் பெருமானுக்குத் திருவையாற்றிலும், திருஞான சம்பந்தர் பெருமானுக்குச் சீர்காழி பிரும்ம தீர்த்தக் கரையிலும், திருநாவலூரருக்குத் திருவெண்ணெய் நல்லூர்க்கோவிலிலும் அம்மையப்பர் காட்சி கிடைத்தது. இம்மூவிடங்களுந்தேவாரவாசிரியர்களான் உயர்வு பெற்று விளங்குவன. மேலும், திருநாவலூரர் திருவருட்டுறையை யுயர்வுறப் பேசுவதைக் காண்க!

"நாயேன் பலநாளும் வேற்று வுலக சூழ்நிலையால் தோன்றும் நினைப்புகள் இன்றி, மனத்தில் உன்னை வைத்துப் பேயாய்த் திரிந் தெய்த்தேன்; பெறுதற்குரிய வருளனைப் பெற்றேன்; மூங்கிலால் சூழப் பெற்ற பெண்ணையின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூர் அருட்டுறையென்னும் கோவிலை மேவியுள்ள பசுபதி! நிலைபெற்றவுனக்கு ஆளாயினேன்; அல்லேன் எனலாமோ?"

"நாயேன் பலநாளும் நினைப்பின்றி மனத்துன்னைப்
பேயாய்த் திரிந் தெய்த்தேன் பெறலாகா வருள் பெற்றேன்
வேயார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்
ஆயாவுனக் காளாயினி யல்லே னெனலாமே!"
சுந்—தேவா—திருவெண்—2

"திருவாரூரில் பிறக்க முத்தி" என்று சமய நூல்கள் இயம்பும் திருவாரூர்ப் பெருமான்பால் சுந்தரமூர்த்திசுவாமிகளுக்கு இடையறாத பற்றுண்டு. சிவபெருமான், சுந்தரமூர்த்திக்காகத் தூது சென்றார் பரவையார் இல்லத்திற்கு என்பதால், அவருக்கு இறைவனாரான்பால் பத்தி நிறையவுண்டு. அத்தகு திருவாரூரின்கண் கோவில் கொண்டிலங்குபவன் தியாகராயப் பெருமான். அப்பெருமானின் திரு

வருட்கு உரியரான சுந்தரர், பெருமானைப் போற்றிப் புகழ் வதைக் காண்மினே!''

"இம்மையில் வாழ்வதற்குரிய பொன்னையும், மறுமை யில் வீட்டுப் பேற்றிற்குரிய வருளையும், தருகின்றவனை, உலகத்திற்கு உரிய போகத்தையும், செல்வத்தையும், மோட்சத்தையும் தந்தருள்பவனை, பிறகு என் பிழையைப் பொறுப் பவனை, செய்கின்ற பிழைகளையெல்லாம், தவிர்ந்து செல்லும் படியாகச் செய்பவனை, அவன் இன்னதன்மையனாக விளங்கு கின்றான என்றறிய வொண்ணாத எம்மானை. எனக்கு எளி வந்த பிரானை, அன்னம் தங்கும வயல் சூழ்ந்த திருப்பழ னத்தின் அணித்துள்ள திருவாரூர் தியாகராயப் பெருமானை மறக்கனும் நியாயமோ?''

"பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமுந் திருவும் புணர்ப்பானைப்,
பின்னை என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாந் தவிரப் பணிப்பானை.
இன்ன தன்மைய னென்றறி யொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை,
அன்னம் வைகும் வயற்பழனத்
தணி ஆரூரானை மறக்கலுமாமே!''

சுந்—தேவா—திருவாரூர்—1

திருநாவுக்கரசர், உலக மக்கட்கு நல்லறிவு கொளுத்து வான் வேண்டி உண்மை புகட்டுகின்றார். சமயக் குறிகளும் அடையாளமும், கோயிலும், நெறிகளும், பெருமான் நின்ற தோர் நேர்மையும், தெரியும் வண்ணம் ஆயிரவேத முழக்கம் செய்யினும், ஐந்து பொறிகளும் அற்றவர்கள் மனத்தில் அவன் புகான புகாததின் காரணம் என்கொல்? பொறிக ளான், அப்பெருமானை வழிபடுகின்றவளவிற்கு. அவைகளைப் பயனுறுத்தி வழிபாடு செய்யவேண்டும் என்பதாம். அவனை வாழ்த்தவும். இன்னும் அவனுக்கு நிகழ்த்த வேண்டிய எல் லாப பூசனைகளையும் நிகழ்த்துதலன்றி, வேதங்களை ஓதுவ தான் மட்டும் எப்பயனும் விளையாதென்கிறார் நாவரசர்,

"குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர்மன மென்கொல புகாததே!"

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே,
வீழ்த்த வாவினையேன் நெடுங் காலமே!"

திருநா—திருக்குறுந்—7

திருநாவுக்கரசு சுவாமிகள் பொதுத்தேவாரத்தில் எழுபத்தெட்டு வகைக் கோயில்களைக் கண்டதாக வுணர்த்தி, அவற்றையெண்வகைப் பாகுபாட்டிலமைத்தின்றார்.

1. கரக்கோயில். 2. ஞாழற் கோயில். 3. கொகுடிக் கோயில். 4. இளங்கோயில். 5. மணிக்கோயில். 6. ஆலக் கோயில். 7. திருக்கோயில். 8. சிவனுறையுங் கோயில். எனக் கோயில்கள் எண் வகைப்பட்டன,

பெருக்காருன கங்கையைச் சடைக்கணிந்த பெருமான் சேரும் கோயில்கள் எழுபதினெட்டும், மற்றும் மேற் குறிப்பிட்ட எட்டுமாம் என்று குறிப்பிடும் தேவாரத்தை ஈண்டுக் காண்க!

"பெருக்காறு சடைக் கணிந்த பெருமான் சேரும்.
பெருங்கோயில் எழுபதினேடெட்டும் மற்றுங்,
கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்,
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக்கோயில்'
இருக்கோதி மறையவர்கள் வழிபட்டேத்தும்,
இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்
திருக்கோயில், சிவனுறையுங் கோவில் சூழ்ந்து,
தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே!"

திருநா—தேவாரம்—பொது—5

திருஞானசம்பந்தர் திருவருள் பெற்றதும் திருமுலைப் பால் உண்டு தெளிவுபெற்றதும், அம்மையப்பர் திருக்கோலக்

காட்சியைக் கண்டதும், திருப்பிரம்மபுரம் அல்லது சீகாழி யம்பதியாகும். இக்கோயிற் பெருமானைச் சிறப்புச்செய்து பாடுதலை இவண் காண்க.

எம்மான் மாதொரு பாகன்; அதனால் அவன் ஒருபாற் காது தோடோடமைந்தது; வெள்ளேற்றினை வாகனமாகக் கொண்டோன்; தூய வெண்ணீறும், பிறையும் அணிந்திருப்பவன்; சுடுகாட்டிலுள்ள சாம்பலைப் பூசியவன்; அவனே வுள்ளத்தைக் கவர்ந்த கள்வன்; ஏடுகள் கொண்ட தாமரை மலரால், மறையோனாகிய பிரமன் முன்னொரு நாளில் எம் பெருமானைப் பணிந்து நிற்க. அப்பெருமானருள் செய்த பெருமை நிறைந்த பிரமபுரியான சீகாழியிலுறையும் பெம்மான் இவன்றான் என்று சுட்டிக் காட்டுகின்றார், சிவகளிறு திருஞான சம்பந்தர்.

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் னுள்ளங் கவர் கள்வன்,
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானிவனன்றே!"

திருஞா—தேவா—1

திருஞான சம்பந்தர் தேவாரம் இயற்கையெழில் நிறைந்ததென்பர். இயற்கையின் வனப்பிற்றான், இறைவனும் அண்ணல் மறைந்து விளங்குகின்றான்என்ற தேர்ந்த வுண்மைகளைத் தெளிவுபடுத்துவது. இவ்வடிகளார் கேதாரத்தில்கோயில் கொண்டிலங்கும் அண்ணலை,இயற்கையோடியையக் கண்டு, வளஞ்சொரியப் பாடியருள்கின்றார் என்பது உன்னி உணரத் தகுந்தது.

"தொண்டர்கள் அஞ்சுகின்ற ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளையடக்கி, வண்டுகள் சேரும், மலராகிய தாமரையைக் கட்டி, வழிபாடு செய்யுமிடம் திருக்கேதாரம் என்பரால், வண்டுகள் பாடவும் மயில் ஆலவட்டம்போல ஆடவும், மான் கன்று துள்ளியாடவும், செதிள்கள் நிறைந்த கெண்டை மீன்கள் பாய்கின்ற

சுனை நீலோற்பல மலர்களால் அலருந்தன்மை நிறைந்தது மேற்சொன்ன பதி" இந்நிகழ்ச்சி கேதாரக் கோவில் அணித்தே நிகழ்ந்ததாகும்.

"தொண்ட ரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிட மென்பரால்,
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ள வரி,
கெண்டை பாயச் சுனை நீல மொட்டலருங்கேதாரமே!"

திருஞா—திருக்கே—தேவா—1

ஆகவே இவ்வாறு நம் சமயாசாரியர்களால் போற்றிப் புகழப்பெற்ற திருக்கோயில்கள்தான் நம் வாழ்வுக்கு உறுதியளிக்க வல்லன. அவைகளை நாம்நன்கு போற்றவேண்டும்; வழிபடவேண்டும். வழிபாட்டில் உறைப்பு வேண்டும். அவ்வாறு நம் திருக்கோயில்களைப் போற்றி உலகம் உய்யுமாக.

"நாடி ஞான சம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே"

தமிழ்ச் சிவஞானபோதம் முதல் நூலா?

(ஒரு கிருத்துவ ஆசிரியர் கருத்து)

[கோ. நீ. சிங்காரவேலு]

"ஒரு சைவ அடியாரின் பாசுரங்கள்" (Psalms of Saiva Saint) என்ற தலைப்பில் திரு. T. ஐசாக் தம்பையா (T. Isaac Tambyah) என்ற யாழ்ப்பாணத்துக் கிருத்துவ

அறிஞர், 500 பக்கங்கள் கொண்ட ஒரு சிறந்த, ஆங்கில நூல் எழுதியுள்ளார். இவர், சைவ அடிகளார் என்று குறிப்பிடுவது தாயுமான அடிகளையே! இந்நூலில் தாயுமானார் பாடல்களில் 366 பாடல்களை ஆங்கிலத்தில் செய்யுள் வடிவிலேயே மொழி பெயர்த்திருக்கிறார். இந்நூலிற்கு 189 பக்கங்கள் கொண்ட ஒரு முன்னுரை எழுதியிருக்கிறார். இம் முன்னுரையில் தமிழின் பெருமை, தொன்மை, சித்தாந்த சாத்திரத்தின் முடிவுகள், தாயுமானாரின் வாழ்க்கைவரலாறு, கொள்கைகள் இன்னோரன்னபிறவற்றை விரிவாக ஆராய்ந்து எழுதியுள்ளார். இந்நூல், பதினைந்து ஆண்டுகள் உழைத்ததின் பயன் என்று அவரே முகவுரையில் எழுதியுள்ளார். 1925-ஆம் ஆண்டு, லண்டன் நகரில், லூசேக் கம்பெனி (LuzaC & Co.,) யாலும், சென்னையில் வேப்பேரி டயோசியின் (Diocesan) அச்சகத்தாலும் பிரசுரிக்கப் பெற்றது. அதற்குப் பின் மறு பதிப்பு வெளிவந்ததாகத் தெரியவில்லை.

5. இந்நூலாசிரியர் தம் சமயமாகிய கிருத்தவத்தில் ஆழ்ந்த பற்றுடையவராயிருந்த போதிலும், (இப்பற்று நூலில் ஆங்காங்கு தெரிகிறது.) தமிழிலும் சைவ சமய சாத்திரங்களிலும் ஆழ்ந்த அறிவும் உணர்ச்சி வாய்ந்த ஈடுபாடுமுடையவராகத் தெரிகிறார். சைவ சமயத்தைப் பற்றிச் சைவப் பெருமக்கள் எழுதும் நூல்களைக்காட்டிலும் வேற்று சமயத்து அல்லது வேற்று நாட்டு அறிஞர்கள் எழுதும் நூல்கள் சிலவகைகளில் பயனுள்ளவை. நம் சமயத்தை நாம் நேசிப்பதும், போற்றுவதும் இயற்கையே. அதுவே முறைமையுமாகும். ஆனால் பல மொழிகளையும் பல சமயங்களையும் ஆய்ந்த பாரபட்சமற்ற திரு. G. U. போப் போன்ற அந்நியர் நம் சமயத்தைப் புகழ்வதில் தனிச் சிறப்புண்டு. பல மொழி அறிவால் அவர்கள் மனத்திரைச் சேலை அகன்றது; வளமுடையது. அத் திரைச் சேலையில் சைவம் வளமான பின்னணியில் மிக்க பொலிவு பெறும். அதனால் இச்

சமயத்தின் உண்மையுயர்வு புலப்படும். இதன் பயன், நம் சமயத்தில் நமக்கு ஈடுபாடு மிகுவதாகும்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

3. தாயுமானரின் பெருமையைப் பற்றிக் குறிப்பிடும் போது திரு தம்பையா உணர்ச்சியோடு எழுதுகிறார். அவர் கருத்துக்களில் சில பின் வருமாறு:—

"தமிழகத்தில் மெய்யுணர்வோடு கூடிய பெருங் கவிஞர்களின் பாடல்களில் தாயுமானர் பாடல்கள்தான் மிகச் சிறந்த இசை யின்பம் தரக்கூடியவை. தம் பாடல்களில், சைவ சித்தாந்த உண்மைகளுக்கு என்றும் தெவிட்டாத இனிய சொற்களால் அழகிய உருவங்கொடுத்துள்ளார். அப்பாடல்களில் ஓசையின்பமும், சொல் நயமும் மாத்திரம் இல்லை. அப்பாடல்கள் இருதயத்திலிருந்து இருதயத்திற்குப் பேசும் பேச்சு. அப் பாடல்கள் இறைவனுக்குச் சாத்தும் சொல்மாலை. அவர் சமய உண்மைகளை வாழ்க்கை அனுபவங்களாக மாற்றி விட்டார். அதனாற்றான் அவர் பாடல்கள் தமிழ் வழங்கும் எந்நாட்டிலும், எக்காலத்திலும் உயிர்த் துடிப்புள்ளவையாக எல்லோராலும் பாராட்டப் பெற்று வருகின்றன.

4. சைவ சித்தாந்தத்தைப் பற்றித் தம்பையா அவர்கள் எழுதிய கருத்துக்களில் சில பின் வருமாறு:—

"சைவம்—அது காஷ்மீர சைவமாயினும் சரி, தென் இந்திய சைவமாயினும் சரி—ஆகமங்களின் அடிப்படையில் உருவானது. ஆகமங்களைக் குறிப்பிட்ட முதல் தமிழாசிரியர் திருமூலர் ஆவார். ஆனால் ஆகமங்கள் வழிவந்தசைவம் திருமூலர் காலத்திற்கு மிக முந்தியது. பிராம்மணங்கள் எழுதப்பட்ட காலத்திலேயே ஆகமக் கருத்துக்கள் சில

வின என்று சொல்லலாம். கல்வெட்டுக்களிலிருந்து, காஞ்சீ புரத்தில் ஆறும் நூற்றாண்டில் சைவ சமயம் செழித்தோங்கி யிருந்ததென்றும், சைவ சித்தாந்தத்தில் துறைபோகியவர் கள் அங்கு இருந்தார்களென்றும் தெரிகிறது. நான்காம் நூற்றாண்டிற்கு முன்பே சித்தாந்த சைவம் தமிழ் நாட்டில் வளர்ந்திருந்தது என்று சொல்வது மிகையாகாது. சித்தாந் தத்தைப் பற்றிய பண்டைய நூல்கள் அழிந்துபோய் இருக் கலாம்.''

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் முதல்நூல் களா என்பதைப் பற்றி ஆசிரியர் பின் வருமாறு கூறுகிறார்:

"தமிழிலுள்ள பதினான்கு சித்தாந்த சாத்திரங்களும் முதல் நூல்களே என்பது என் கருத்து. சிவஞான போத சூத்திரங்கள் மாத்திரம் சமஸ்கிருத ரௌரவ ஆகமத் திலுள்ள பாச விமோசனப் படலத்தின் மொழி பெயர்ப்பு என்று சொல்லப்படுகிறது. ஆனால் கீழே குறிப்பிடும் கருத் துக்களுக்கும் ஆதாரம் உண்டு.

1. ரௌரவ ஆகமத்தில் பாச விமோசனப் படலம் பிற்சேர்க்கையாக இருக்கலாம்.

2. இது எவ்வாறாயினும், அப்படலம் சிவஞான போ தத்தின் முதல் நூல் அன்று.

3. தமிழ்ச் சிவஞான போதம் முதல் நூல். சமஸ் கிருதத்தில் உள்ளது அதன் மொழி பெயர்ப்பு.

6. திரு. T. பொன்னம்பலம் பிள்ளை M. R. A. S. அவர்கள் மூன்றாவது சைவர் மாநாட்டில் ஆற்றிய சொற் பொழிவுகளை ஆதாரமாகக்கொண்டு மெய்கண்டார் இயற்றிய சிவஞான போதம் தமிழ் மொழியில் வந்த முதல் நூலே என்ப தற்குப் பின்வரும் காரணங்கள் கூறலாம் :—

1. தொல்காப்பிய காலத்திற்கு முன்பே தமிழக மக் கள் இறைவன், ஆன்மா, தளை என்பவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளனர்.

2. சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற பண்டைத் தமிழ் இலக்கியங்களில் கடவுள், உயிர், வினை ஆகியவை பற்றிய கருத்துக்கள் விரவி யுள்ளன.

3. மெய்கண்டார், தம் காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் நிலவி வந்த கோட்பாடுகளைத் தொகுத்துச் சுருக்கமாக ஒரு நூல் செய்தார். அத் தொகுப்பு நூல்தான் சிவஞான போதம்.

4. மெய்கண்ட தேவர் வெறும் மொழி பெயர்ப்பாளராயிருந்தால், அதுவும் ஆகமத்தின் ஒரு பகுதியை மொழி பெயர்த்திருந்தால், இதை அவர் மறைக்க ஞாயமில்லை.

(அ) அவர் இதைப் பற்றிக் குறிக்கவில்லை.

(இ) சிவஞான போதத்திற்குப் பாயிரம் பாடினவர்களும் இதைப்பற்றிக் குறிக்கவில்லை.

(உ) இந்நூல் மொழி பெயர்ப்பு என்று எந்தப் பழைய நூலிலும் குறிப்பிடவில்லை.

5. வடமொழி நூலின் பன்னிரெண்டாம் சுலோகம் இரண்டாவது வரி, 'அந்தச் சுலோகத்தின் முதல் வரி சிவஞானபோதம் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது' என்ற பொருள்பட இருக்கிறது. அந்தப் பெயர்கொண்ட சமஸ்கிருத நூல் இல்லை.

6. முதல் நூல் என்று சொல்லப்பட்ட வடமொழிச் சுலோகங்களோடு தமிழ்ச் சூத்திரங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் பின்வரும் செய்திகள் விளங்கும் :—

1. சிவஞானபோத முதல் சூத்திரத்தில் மறுபிறப்பிற்குக் காரணம் மலம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

வடமொழிச் சுலோகத்தில் இது சொல்லப்படவில்லை.

2. இரண்டாவது சூத்திரத்தில் இறைவனுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு நீக்கமின்றி நிற்கும் என்ற சரியான கருத்தைக் கூறியுள்ளது. வடமொழிச் சுலோகத்தில்

இறைவனது ஆணை அவனோடு நீக்கமின்றி நிற்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

3. நான்காம் சூத்திரத்தில் இருளில் ஆன்மாவின் நிலையையும் மலத்தில் தன்னுணர்வில்லாத தன்மையையும் விளக்குகிறது. இவை சைவ சித்தாந்தத்தின் முக்கிய கொள்கைகள். வடநூல் சுலோகங்களிற் இவை பற்றிய குறிப்புகள் இல்லை.

4. ஒன்பதாம் சூத்திரத்தில் இறைவனைப் பாச ஞானத்தால் அறிய முடியாது என்றும் ஐந்தெழுத்தோதுதல் முறை என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. வடமொழியில் இவையில்லை.

5. வடமொழியில் பன்னிரெண்டாம் சுலோகத்தில் சிவஞானபோதம் என்ற நூல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிவஞான போதத்தில் அப்படிக் குறிப்பிடவில்லை; அதுவே அந்நூலாகையால்.

6. பன்னிரெண்டாம் சுலோகத்தின் இரண்டாம் பாகம் தமிழில் ஒரு விஷயத்தையும் வடமொழியில் மற்றொரு விஷயத்தையும் கூறுகிறது.

7. பன்னிரெண்டாம் சூத்திரத்தில் சீவன் முக்தர்களின் இலக்கணம் கூறும்போது அவர்கள் மலத்தின் நீங்கினவர்கள் என்று கூறப்படுகிறது. வடமொழியில் இவ்விளக்கம் இல்லை.

"மெய்கண்டார் வெறும் மொழிபெயர்ப்பாளரா யிருந்தால்,

"பொய் கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன்"

என்று தாயுமான அடிகள் குறிப்பிட்டிரார்."

"இன்னோரன்ன ஆதாரங்களால் பதினான்கு சாத்திரங்களில் விளக்கப்பட்ட சைவ சித்தாந்தம் தமிழ் நூல்களையே ஆதாரமாகக்கொண்டது என்று கூறுவேன். அதனால், தமி

மூல்லாத மற்றைய நூல்களோடு சித்தாந்த ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவில்லையென்றோ அவைகளிலிருந்து பல னடையவில்லையென்றோ பொருளில்லை.''

7. இந்நூலிலுள்ள அடிக்குறிப்புகள் மிகவும் பயனுள் ளவை. அவைகளிலிருந்து திரு ஐசாக் தம்பையா அவர்களுக்கு திரு. J. M. நல்லசாமிபிள்ளையவர்களிடத்தில் பெருமதிப்பு என்று தெரிகிறது. அவருடன் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தார். அவர் நூல்களிலிருந்து பல இடங்களில் ஆதாரங்கள் காட்டியிருக்கிறார். ஆனால் சிவ ஞானபோதம் முதல் நூலா என்ற விஷயத்தில் அவரோடு மாறுபடுகிறார்.

திரு. தம்பையா எழுதுகிறார் :—

"அச்சிறந்த அறிவாளி (நல்லசாமி பிள்ளை) கூட பின் வரு மாறு எழுதாமலிருக்க முடியவில்லை :—

"அத்வைதத்திற்கு முதன் முதலில் இவ்வளவு அழ கான விளக்கம் கொடுத்த பெருமை மெய்கண்டாருக்கே உரிமை.''

8. திரு. ஐசாக் தம்பையா அவர்களின் நூலில் அவ ருடைய ஆழ்ந்தகன்ற புலமையும் எண்ணற்ற மேல்நாட்டு நூல்களோடு நம்நாட்டு நூல்களில் துறை போகிய அறிவும், உழைப்பும் பிரதிபலிக்கின்றது. அவருடைய கருத்துச் சில இப்போது பழம் பாடமாயிருக்கலாம். சில, பின் செய்த ஆராய்ச்சியால் ஒதுக்கப்படலாம். ஆனால் அவர் நூல் 40-ஆண்டுகளுக்கு முன்வெளிவந்தது என்பதை மறக்கலாகாது. அவர் பிற சமயத்தவராயிருந்தும் அவருடைய அறிவையும் உழைப்பையும் சைவத்திற்கு அர்ப்பணித்து இவ்வரிய நூலை இயற்றியதற்கு அவர் பெயரை நினைவுபடுத்திக்கொள்ள, சைவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

9. அவருக்கு அஞ்சலி செலுத்தும்வகையில் இக்கட் டுரையை எழுதினேன்.

மதிப்புரை

திருக்குறள்: பீஜி பாஷை மொழி பெயர்ப்புப் பதிப்பு. பீஜித்தீவு ராமகிருஷ்ண மிஷன் பக்கம் 16+136.

பீஜித் தீவிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மடத்தார் சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா மலர்களுள் ஒன்றாக திருக்குறளை பீஜி மொழியில் பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள். பக்கத்துக்கு இரண்டு அதிகாரம் வீதம் இடப்புறம் திருக்குறள் பீஜி மொழியிலும், வலப்புறம் ஆங்கில மொழிபெயர்ப்பும் சேர்த்து நன்முறையில் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள். ஆங்கில மொழிபெயர்ப்பானது ராஜாஜி தீக்ஷிதர், போப், வ.வே.சு. ஐயர், பூரணலிங்கம் பிள்ளை, டிரு முதலிய பலர்செய்த மொழிபெயர்ப்புக்களுள் சிறப்பான ஒன்றைத் திரட்டி அமைத்ததாகும். சுவாமி ருத்திரானந்தரின் குறிப்புடன் நூல் வெளியிடப்பட்டிருக்கிறது விவேகானந்தர், திருவள்ளுவர் படங்களும் சேர்க்கப் பெற்றுள்ளன. கடல் கடந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் கண் காணாத் தீவில் வாழும் தமிழர்களுக்காக மட்டுமன்றி, அந்நாட்டின் சொந்தக் குடிகளான பீஜி மக்களுக்காகவுமே இந்த நூல் வெளியிடப்பட்டுள்ளது. பீஜி மொழி இங்கு ரோமன் எழுத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இவ்வெளியீடு தமிழ்நாட்டு மக்களுக்கு ஓர் எச்சரிக்கையாகவும் கொள்ளத்தக்கது. பிறநாட்டு மக்கள் திருக்குறளைப் படித்தறியும் பொருட்டு, தாயகத்தாரே வேற்று நாடுகளுக்கு மொழிபெயர்ப்புக்களை அச்சிட்டு அனுப்பவேண்டியவர்கள்; அவ்வாறு நாம் செய்யத் தவறியமையை இது சுட்டிக்காட்டுவதுபோல் உள்ளது

இந்நூலை அத்தீவுகளிலுள்ள மக்கள் கற்பார்களாக. குறள்மணம் அவர்கள் வாழ்க்கையில் சிறிதளவேனும் கமழ்வதற்கு இந்நூல் துணைசெய்யும் என்பது உறுதி.

—(மு. அ.)

'துரிய வெளி' என்ற நூல் ஒன்று வரப் பெற்ருேம். இது அருள் திரு துரியானந்தர் அவர்களால் எழுதப் பெற்றது. இதில் ஆசிரியர் தம் அனுபவத்தை மிக அருமையாக விளக்கிச் சொல்கிருர். தல யாத்திரை சென்றுவந்த ஒருவர் பின்னர் அவ்விடங்களுக்குச் செல்ல விரும்பும் மற்றவர்களுக்கு எவ்வாறு சுவைபட எடுத்துச் கூறுவாரோ அதே போன்று இவர்தான் யோக நெறியில் முன்னேற்றம் அடைந்த நிலையை விவரிக்கிருர். தல யாத்திரை பற்றிச் சொல்லாற்றல் மிக்கோர் விளக்கிக் கூறுவது எளிது. ஆனல் துரியவெளி யனுபவம் பற்றி அச்சொல்லாற்றல் மிக்கோர்கூட அவ்வளவு எளிதாய் எடுத்துக் கூற இயலாது. அவ்வனுபவத்தைக் கூறுவதில் இவ்வாசிரியர் வெற்றி கண்டுள்ளார் என்றே கூறலாம். குறிப்பிட்ட இடத்தைத் தல யாத்திரை சென்ருேர் போய்ச் சேர்வது எவ்வாறு உறுதியோ அதே போன்று இவ்வாசிரியர் குறிப்பிட்ட நிலைகளை யெல்லாம் படித்து முயன்று. செயற்படுத்தித் துரியவெளி யனுபவம் பெற்றிலங்க அன்பர்கள் முயல்வார்களாக.

வெளியிட்டோர்:— ஞானம் பதிப்பகம்,

1. இராமாநுஜம் செட்டித்தெரு, சென்னை-4.

விலை ரூ. 1-50 (அம்பை)

''பாமாலை' என்ற நூல் ஒன்று வரப் பெற்ருேம். இதில் குழந்தைக் கவிஞர். தெ. குழந்தை சந்தம் நிறைந்தனவாய்ப் பலபாக்களைப் பாடியுள்ளார். இத்துறையில் குழந்தை நிலையினராயிருந்தாலும் ஆர்வமும் அன்பும் கலக்கப் பெற்றவராய் இறையன்பு ஊட்டக் கூடிய பாக்

களைப்பாட இவர் எடுத்துக் கொண்ட முயற்சி போற்றத் தக்கது. இவர் முயற்சி சிறக்க; வெல்க.

கிடைக்குமிடம்:— தெ. குழந்தை, பொத்தனூர், வேலூர். (சேலம் மாவட்டம்) விலை குறிக்கப்பெறவில்லை.

(அம்பை)

''ஸ்ரீமத் சொக்கலிங்க ஐயா அவர்கள் சரித்திரம்' என்னும் நூல் ஒன்று வரப்பெற்ரோம். இந்நூல் தற்போது இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

ஐயா அவர்கள் நம் சைவசித்தாந்த நெறியைப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் அளவில் 108 நூல்கள் இயற்றி யுள்ளார்கள். நம் சமய நிறுவனங்கள் பலவற்றை நிறுவி சித்தாந்த நெறி என்றும் நின்று நிலவ வேண்டிய நிவந்தங் களையும் ஏற்படுத்தியுள்ளார்கள். மற்றும் அவர்கள் அருஞ் செயல்கள் பலவற்றையும் இப்புத்தக வாயிலாய் அறியலாம்,

கிடைக்குமிடம் :— ஸ்ரீமெய்கண்ட வித்தியாசாலை, சிதம்பரம். விலை குறிக்கப்பெறவில்லை. (அம்பை)

புரசைத் திருநெறிக் கழகத்தார் தென்பாண்டி நாட் டுத் திருத்தலங்களில் வழிபாட்டுக்குச் சென்றபோது அத் தலங்கள் பற்றிய குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர். அக்குறிப்பு நூல் ஒன்று வரப்பெற்ரோம்.

விலை குறிக்கப் பெறவில்லை. (அம்பை)

பொன் மொழிகள்

மகாத்மா காந்தி இந்து சமயத்தைப் பற்றி எழுதிய கருத்துக்கள் சில பின்வருமாறு:—

"இந்து சமயம் உயிருள்ளது. அது இயற்கை நியதிக் குட்பட்டு வளரும்; சிதையும். அதன் வேர் பகுக்க முடியாதது. அது கணக்கற்ற கிளைகளையுடைய பெரிய மரமாக வளர்ந்துவிட்டது. அதற்கு ஆதாரமான முதல் நூல் உண்டு என்றும் சொல்லலாம்; இல்லை என்றும் சொல்லலாம். அது ஒரே நூலை ஆதாரமாகக் கொண்டதன்று. அது கங்கையாற்றைப் போன்றது. தொடக்கத்தில் தூய்மையாகவும், வழியில் அழுக்குகளை ஏற்றும் செல்கிறது. கங்கையைப் போலவே அது மொத்தத்தில் நன்மையளிக்கிறது. பழக்க வழக்கங்கள் சமயமல்ல. அவைகள் மாறலாம். சமயம் மாறாது. இந்து சமயத்தின் தூய்மை இந்துக்களின் தன்னடக்கத்தைப் பொறுத்தது. சாத்திரங்கள் வளர்ச்சியுடையன. வேதம், உபநிடதம், சிமிருதி, புராணம், இதிகாசம் இவைகள் ஒரே காலத்தில் தோன்றியதல்ல; அவ்வக் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப வளர்ந்தவை. ஆகையால்தான் அவைகள் ஒன்றுக்கொன்று முரணுள்ளவை போலத் தோன்றுகின்றன. அவை புதுப்புது உண்மைகளைச் சொல்லவில்லை; ஆனால் அவ்வக் காலத்தில் அவ்வுண்மைகள் நடைமுறையில் எப்படிக் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதை தெரிவிக்கின்றன. ஒரு காலத்தில் பயன்பட்ட பழக்கங்களை மக்கள் கண்மூடித்தனமாக மற்றைய காலத்திலும கடைப்பிடித்தால் சேற்றில் அழுந்துவர். உதாரணமாக உயிர்ப் பலி ஒரு காலத்தில் பழக்கத்தில் இருந்ததால் இப்போது அப்பழக்கத்தைப் புதுப்பிக்கலாமா? தீண்டாமை ஒரு காலத்தில் பழக்கத்தில் இருந்ததால் இப்போதும் அதை ஆதரிக்கலாமா? இந்து மதம் தேங்கியிருப்பதை வெறுக்கிறது: ஞானத்திற்கோரெல்லை யில்லை. அதுபோல் சத்தியத்தைச் செயல்படுத்தும் முறைகளும் கணக்கற்றவை"

சைவத்தின் மறுமலர்ச்சிக்கு மேற்குறித்த கருத்துக்கள் பயன்தரும்.

—கொ. நீ. சி.

பிற செய்திகள்

நம் சமாஜ முன்னுள் செயலாளர் திரு. G. கலியாணம் பிள்ளை அவர்கள் திருமகள் திருவளர்செல்வி மீனும்பாளுக்கும் எருக்கூர் நிலக்கிழார் மா. நடேச பிள்ளையவர்கள் திருமகனுர் திருவளர்செல்வர் ந. சின்னப்பா அவர்களுக்கும் 26—5—65 அன்று மாயூரம் அபிராமி அம்மையார் யோக மடத்தில் திருமணம் சிறப்புற நிகழ்ந்தது. நம் சமாஜப் பெரியார் திரு. கீ. இராமலிங்கனுர் அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். சமாஜச் சார்பில் திரு. முருகவேள் அவர்கள் இயற்றிய வாழ்த்துப்பாக்களை திரு. அம்பை சங்கரனுர் அவர்கள் வாழ்த்தியளித்தார்கள். திருமணம்கொண்ட தம்பதிகள் எல்லாம் வல்ல இறையருளால் பன்னலமும் பெற்றுச் சிறந்தோங்கத் திருச்செந்திலாதிபன் திருவருள் சுரப்பானுக.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையில் 26-4-65 ல் திருநாவுக்கரசு நாயனுர் திருநாள் திருச்சி மண்டி ந. ச. சு. கணபதியா பிள்ளை ஆதரவில் 4, 5, 6 திருமுறைகள் பாராயணத்துடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருப்போரூர் ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகள் 306-வது ஆண்டுப் பெரு விழா 15—5—65 அன்று திருப்போரூரில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது

ஆதிகுமர குருபர சுவாமிகளின் 277-ஆம் ஆண்டு மகேசுவர பூஜைத் திருநாள் 18-5-65 அன்று திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தில் சிறப்புற நிகழ்ந்தது. அன்றே நம் இந்தியாவில் கன்னியாகுமரி முதல் திருக்கேதாரம்வரை 44 இடங்களில் ஏழைகளுக்கு அன்னம் பாலிப்பு பல்வேறு திருப்பதிகளில் நிகழ்ந்தன.

புரசைத் திருநெறிக் கழக 51-ஆம் திங்கள் வழிபாடு தென்பாண்டிநாட்டில் 16-5-65 முதல் 23-5-65 முடிய நிகழ்ந்தது. திண்டுக்கல், தூத்துக்குடி, திருச்செந்தூர், திருச்சுழியல், குலசை, ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி, நாகர்கோயில், சுசீந்திரம், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், தென்காசி, திருக்குற்றாலம், பாபநாசம், அம்பாசமுத்திரம், சிவசைலம், திருமலை, திரு இலஞ்சி, சங்கரநயினுர் கோயில், கழுகுமலை, திருவில்லிபுத்தூர், திருக்கருவை விருதுநகர், திருவாதவூர் முதலிய தலங்களை வழிபட்டு கழகத்தவர் நற்பேறு பெற்றனர்.

பிற செய்திகள்

பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் 55-வது ஆண்டு விழா காஞ்சிபுரம் சீலஸ்ரீ ஞானப் பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் தலைமையில் 22-5-65, 23-5-65 அக இருநாட்களிலும் சிறப்புற நிகழ்ந்தது. பல பெருமக்கள் கலந்து விரிவுரையாற்றிச் சிறப்பித்தனர்:

குன்றத்தூர் சேக்கிழார் விழா 25-5-65 முதல் 3-6-65 வரை நடைபெற்றது. இவ்விழாவில் திரு,ம.பொ.சி. டாக்டர் நடராஜன் M.L.A. டாக்டர் மா. இராசமாணிக்கனார், சே. த. இராமலிங்கம் பிள்ளை, பாலூர் கண்ணப்ப முதலியார் போன்ற பெருமக்கள் பலர் கலந்து விரிவுரைகளாற்றினர்.

அங்குள்ள சேக்கிழார் திருமடத்தில் பெரிய புராண வகுப்புகள் சிறப்புற நிகழ்ந்தன.

மேலும் சேக்கிழார் வரலாற்றையொட்டியே 10நாட்களிலும் பெருந்திருவிழா சேக்கிழார் கோயிலில் சிறப்புற நிகழ்ந்தது.

நம் சமாஜத் துணைத்தலைவர் திரு.தி.கி. நாராயணசாமி நாயுடு அவர்கள் அரும்பெறல் அன்னையார் நாகம்மையார் 15-5-65 சனியன்று எம்பெருமான் இணையடி நீழலடைந்தது தெரிந்து வருந்துகின்றோம். 30-5-65 ஞாயிறன்று காசியம்பதியில் கங்கைக்கரையில் இறுதிச் சடங்குகள் நிகழ்ந்தன. மறைந்த அம்மையாரின் ஆன்மா இறைவன் திருவருளால் பேரின்பப் பெருவாழ் வெய்த அவன் தாள்களையே வாழ்த்தி வணங்குகின்றோம். (துணையாசிரியர்)

நம் சமாஜச் சார்பில் 6—6—65 அன்று தூளை அவதானம் பாப்பையர் ரோடு, சிதம்பரேசுவரர் தேவத்தானத்தில் சேக்கிழார் சிறப்பு விழா நிகழ்ந்தது. தாம்பரம் திரு. ச. நடேச முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். கயப்பாக்கம் திரு. க. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் சேக்கிழார் சிறப்புப் பற்றி பேசினார்கள்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam,12, East Mada St., Mylapore, Madras-4.